**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 57/2019</u>**

இந்நீதிமன்றத்து உதவியாளர் திரு.சு. குணசேகரன் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26– ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.**

**தேதி – 26.06.2025**

**பெயர் – பத்மநாபன்**

**த/பெ – சுப்புராமநாயுடு**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 1.15 பி.எம்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

4. நான் காலிசெய்ய சொல்லும் சொத்தின் நீளம் மற்றும் அகலம் என்னவென்றால் எனக்கு தெரியாது. அச்சொத்தின் நான்கெல்லைகள் குறித்த விவரம் என்னவென்றால் கிழக்கில் சோழவரம் பஞ்சாயத்து யூனியன் ஆபிஸ், மேற்கில் கல்க்கத்தா நெடுஞ்சாலை, வடக்கே காரனோடை ரோடு, தெற்கே சோழவரம் ரோடு உள்ளது. மேற்படி சொத்து 3 சாலைகளுக்கு நடுவில் அமைந்துள்ளதா என்றால் ஆம். நான் பத்மாவதியம்மாளிடமிருந்து வாங்கியதாக சொல்லும் சொத்தின் கிரையப்பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பத்மாவதியம்மாவிடமிருந்து வாங்கியதாக கூறும் சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 437/2 பி ஆகும்.

5. அதன் விஸ்தீரனம் என்னவென்றால் 2 ½ செண்ட்ஸ் ஆகும். அதன் நான்கெல்லைகள் என்னவென்றால் கிழக்கில் சோழவரம் பஞ்சாயத்து யூனியன் ஆபிஸ், மேற்கில் கல்க்கத்தா நெடுஞ்சாலை, வடக்கே காரனோடை ரோடு, தெற்கே சோழவரம் ரோடு ஆகும். நான் பத்மாவதியம்மாளிடம் வாங்கிய சொத்தும் இந்த வழக்கு சொத்தும் ஒரே சொத்தா என்றால் ஆமாம்.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 1.25 பி.எம்.**